Before the Court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District at Nagercoil

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348002

1. District : மாவட்டம் Kanyakumari PS: காவல்நிலையம் V&AC Kanyakumari Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் **02/2025** Date: நாள் 16.04.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் :15.04.2025 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் :17.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.04.2025 Time நேரம் : 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Pacode Town Panchayat about 35 Km West
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.Devadhas (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kamalan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1980 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Mason (g) Address : முகவரி Door No.22/54, Kurinjanvilai, Pacode P.O, Vilavancode Taluk, Kanyakumari District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tr.Justin Jebaraj, Record Clerk, Pacode Town Panchayat, Kanyakumari District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...S.John Benjamin... பதவி ......Inspector.... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

16.4.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

16.04.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.04.2025
09.45hrs

Name: பெயர் T.T.REMA...............
Rank: நிலை Inspector, .........No. எண் .........
V&AC, Kanyakumari

**Attachment to column No-12 of FIR in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No-02/2025**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:- இன்று 16.04.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் TT.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா குறிஞ்ஞான்விளை க.எண்- 22/54 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.கமலன் மகன் திரு.க.தேவதாஸ் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 16.04.2025 ம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புனர் க.தேவதாஸ் வயது-45, த.பெ கமலன், க.எண்- 22/54 குறிஞ்ஞான்விளை, பாகோடு அஞ்சல், விளவங்கோடு தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம். ஐயா, நான் கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா குறிஞ்ஞான்விளை என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 7-ம் வகுப்பு வரை படித்து விட்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எனது அண்ணன் திரு.ஜெயக்குமார் மற்றும் அவரது மனைவி திருமதி.சலோமியா ஆகியோரது பெயரில் பாகோடு A.கிராமம் R.S.NO-349/8A1 ல் உள்ள 18 சென்று இடத்தையும் அதில் அமைந்துள்ள பாகோடு பேரூராட்சி கதவு எண். 14/179 என்ற வீட்டினையும் மார்த்தாண்டம் ஜாயின்ட் 2 இனை சார்பதிவாளர் அலுவலக ஆவன என்.1948/2019 மூலம் திரு.ஆன்றனி த/பெ திரு.அம்புரோஸ் பனவிளை வீடு பாகோடுஅஞ்சல் விளவங்கோடு தாலுகா மற்றும் அவரது மனைவி திருமதி.லில்லிபாய் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றிருந்தனர். மேற்படி கதவு என்.14/179 என்ற வீட்டிற்கு பாகோடு பேரூராட்சியில் திரு.ஆன்றனி பெயரில் சொத்து வரி செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது எனது அண்ணன் திரு.ஜெயக்குமார் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். எனது அண்ணனின் மனைவி திருமதி.சலோமியா உடல்நலம் குன்றி இருப்பதால் மேற்படி திரு. ஆன்றனி பெயரில் மேற்படி வீட்டிற்கு செலுத்து வந்த சொத்து வரியினை எனது அண்ணன் மற்றும் அவரது மனைவி திருமதி.சலோமிய பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டி அவர்கள் கேட்டு கொண்டபடி மனு ஒன்றை எனது அண்ணன் மனைவி பெயரில் பெற்று அத்துடன் இணைக்கப்பட் வேண்டிய ஆவணங்களையும் இணைத்து பாகோடு பேரூராட்சியில் கடந்த 08.04.2025 அன்று மாலை சுமார் 03.00 மணியளவில் அங்கு அலுவலில் இருந்த ரெக்கார்டு கிளார்க் திரு.ஜஸ்டின் ஜெபராஜ் என்பவரிடம் கொடுத்தேன். சுமார் ஒரு வாரத்திற்கு மேலாகியும் எந்த தகவலும் இல்லாத காரணத்தல் நேற்கு (15.04.2025) மாலை சுமார் 05.00 மணியளவில் பாகோடு பேரூராட்சிக்கு சென்று அங்கு பணியிலிருந்த ரெக்காடு கிளார்க் திரு.ஜஸ்டின் ஜெபராஜை சென்று பார்த்து நான் கொடுத்த சொத்து வரி பெயர் மாற்ற விண்ணப்பம் தொடர்பாக கேட்டபோது திரு.ஜஸ்டின் ஜெபராஜ் என்னிடம் உங்கள் அண்ணன் மற்றும் அவரது மனைவி பெயரில் சொத்து வரி பெயர் மாற்றனும்னா கொஞ்சம் செலவாகும் என்று சொன்னார். என்ன செலவாகும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் ரூ.50,000/- தந்தால் உங்கள் அண்ணன் மற்றும் அவராது மனைவி பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதாக கூறினார். நான் அதற்கு என் அண்ணன் வெளிநாட்டில் இருப்பதால் நான் தான் தற்போது பணத்தை புரட்டிக் கொண்டு வர வேண்டும் நிங்க பார்த்து செஞ்சு கொடுங்க சார் என்று சொன்னே. அதற்கு அவர் அப்படின்னா நிங்க ரூ.20,000/- பணத்தை ரெடி பண்ணி என்னிடம் கொடுத்தால் தான் உங்கள் அண்ணன் மற்றும் அவரது மனைவி பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்புடன் சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாமல்

இருந்தாலும் அப்போது அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு விட்டிற்கு வந்து விட்டேன். எனது அண்ணன் மற்றும் அவரது மனைவி பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.20,000/- பணத்தை லஞ்சமாக கேட்ட பாகோடு பேரூராட்சியில் ரெக்கார்டு கிளார்க் ஆக பணிபுரியும் திரு.ஜஸ்டின் ஜெபராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு K.தேவதாஸ் 16.04.2025.Sir received the complaint on 16.04.2025 at 07.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of Regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Kanyakumari V&AC Cr.No.02/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 16.04.2025 at 09.00 hrs and took up for investigation. s/d 16/04/2025 Ins T.T.REMA, Inspector, V & AC, Kanyakumari

இந்த அசல் முதல் தகவலறிக்கையை வாதியின் புகார் மனுவுடன் இணைத்து கனம் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கும் எடுத்து கொண்டேன்.

Rema
16/04/2025

T.T.REMA
Inspector
V&AC, Kanyakumari